IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

OS.No.73/2024

dated : 11.06.2025

D.W. 2

Name அய்யன் கணேசமூர்த்தி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

<u>**குறுக்கு விசாரணை**</u>

1ம் பிரதிவாதி என் சித்தப்பா முறை வேண்டும். பிரதிவாதிகள் தரப்பில் அவர் 1வது சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். அவர் நீதிமன்றத்தில் அழைத்த சாட்சியத்தை படித்துப் பார்த்தேன். எனக்கும் 4ம் பிரதிவாதிக்கும் சேர்த்தே அவர் சாட்சியமளித்துள்ளார் என்றால் சரிதான். வாதிகள் சங்கத்தில் உள்ள உறுப்பினர்கள் அனைவரும் வரிதாரர்கள் அல்ல என்று எதிர்வழக்குரையில் கூறவில்லை என்றால் அதுபற்றி ஞாபகமில்லை. வாதி சங்க உறுப்பினர்களில் யார் யார் வரிதாரர்கள் அல்ல என்று என்னால் குறிப்பிட்டுக் கூற இயலாது. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தில் கூறப்பட்டுள்ள சங்கதிகளை 1ம் பிரதிவாதியின் முதல் விசாரணை வாக்குமூலத்தில் கூறியுள்ளார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி குறுக்குவிசாரணையில் கூறிய குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக நான் மீண்டும் அதில் கூறப்படாத சங்கதிகளை சேர்த்து முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது முதல்

விசாரணை வாக்குமூலம் பத்தி 14 மற்றும் 15ல் கூறப்பட்டுள்ள சங்கதிகள் வழக்கிற்காக தற்போது கூறப்படும் புதிய சங்கதிகள் என்றும் சொன்னால் சரியல்ல. அவை உற்பத்தி செய்யப்பட்ட புதிய சங்கதி என்றால் சரியல்ல. பிரதிவாதி தரப்பில் 1ம் பிரதிவாதி எங்களுக்காகவும் சேர்த்தே சாட்சியமளித்துள்ள நிலையில் அது குறித்து நான் மீண்டும் சாட்சியமளிப்பது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.06.11 18:15:51 +0530